இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 147 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 21 – ஞாயிற்றுக்கிழமை 05 ஜனவரி 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 147 : Thiruvalluvar Year - 2055 - Margazhi 21 - Sunday 05 January 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00

## 2.21 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு

# பொங்கல் பரிசுத் தொகுப்பு டோக்கன்!

## வீடுவீடாகச் சென்று வழங்கும் பணி தொடங்கியது!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (3.1.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட ஐந்தாவது காவல் ஆணையத்தின் தலைவர் – சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் சி.டி.செல்வம் அவர்கள் சந்தித்து, தமிழ்நாடு காவல் ஆணையத்தின் 2023 – 24ஆம் ஆண்டிற்கான பரிந்துரை அறிக்கையைச் சமர்ப்பித்தார். இந்நிகழ்வின்போது தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல் ஆணையத்தின் உறுப்பினர்கள் கா.அலாவுதீன், முனைவர் கே.இராதாகிருஷ்ணன், மேனாள் பேராசிரியர் முனைவர் நளினி ராவ், மரு.சி.ராமசுப்பிரமணியன், உறுப்பினர் – செயலர் காவல்துறை இயக்குநர் மகேஷ்குமார் அகர்வால் ஆகியோர் உடனிருந்தனர்.

**சென்னை, ஜன. 5 -**

**பொங்கல் பரிசுத் தொகுப்புக்கான டோக்கன்கள், வீடுவீடாக விநியோகம் செய்யும் பணி தொடங்கியது.**

**பொங்கல் திருநாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பொங்கல் பரிசுத் தொகுப்பு அறிவித்துள்ளார். தலா ஒரு கிலோ பச்சரிசி, சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு மற்றும் வேட்டி, சேலை ஆகியவை நியாய விலைக்கடைகளில் வழங்கப்பட உள்ளது.**

**அதேபோல் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படுகிறது.**

ஜனவரி 9ஆம் தேதி பொங்கல் தொகுப்பு விநியோகம் செய்யப்படவுள்ள நிலையில், அதற்கான டோக்கன் விநியோகம் நேற்று முன்தினம் காலை தொடங்கியது. சென்னையில் பொதுமக்களின் வீடுகளுக்கே நேரில் சென்று நியாயவிலைக்கடை ஊழியர்கள் டோக்கன்களை விநியோகித்து வருகின்றனர்.

தமிழக அரசு, 2.21 கோடி அரிசி கார்டுதாரர்களுக்கு தலா 1 கிலோ பச்சரிசி, சர்க்கரை, முழு கரும்பு அடங்கிய பரிசுத் தொகுப்பை வழங்க உள்ளது. அதன் வினியோகம் ரேஷன் கடைகள் வாயிலாக, வரும், 9ம் தேதி துவங்குகிறது. இந்தப் பணிகளை, 13ம் தேதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

அதற்கு ஏற்ப எந்த தேதி, நேரம் கடைக்கு வந்து பொங்கல் தொகுப்பை வாங்க வேண்டும் என்ற விபரம் அடங்கிய, 'டோக்கன்'களை கார்டுதாரர்கள் வீடுகளில் வழங்கும் பணியில், ரேஷன் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ரேஷன் கடைகளில் கார்டுதாரர்களுக்கு அரிசி, கோதுமை, சர்க்கரை, துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவை வழங்கப்படுகின்றன. கடை ஊழியர்கள், ஒரு நாளில் அரிசி, மற்ற நாட்களில் வேறு பொருட்கள் என, வழங்குகின்றனர்.

அடுத்த வாரம் முதல் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படுவதால், தற்போது கடைக்கு வரும் கார்டுதாரர்களுக்கு, அனைத்து பொருட்களையும் ஒரே தவணையில் வழங்குமாறு, கடை ஊழியர்களுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது.

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடும் பொருட்டு மக்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ள பொங்கல் பரிசுத் தொகுப்பினை பொதுவிநியோக அங்காடிகளின் மூலம் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தடையின்றி வழங்குவது குறித்தும் மற்றும் பொது விநியோக அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் குறித்தும் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆய்வுக்கூட்டம் நடத்தினார்.

தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ள பொங்கல் பரிசுத் தொகுப்பில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் நகர்வு செய்யப்படும் பச்சரிசி மற்றும் சர்க்கரையின் தரத்தினை உறுதி செய்திடுமாறும், கரும்பின் நுனியிலிருக்கும் தோகையினை வெட்டாமல் முழுக் கரும்பையும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கிட கூட்டுறவுத் துறையினருடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

மேலும், பொதுவிநியோக அங்காடிகளில் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு மற்றும் விநியோகத்தின் நிலையினை மாநிலம் முழுவதும் கண்காணித்து, உடனுக்குடன் குறித்த காலத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அனைத்துப் பொருட்களும் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்திடவும் அறிவுறுத்தினார்.

# பேரறிஞரை அவமானப்படுத்தும் ஆனந்த விகடனே மன்னிப்புக் கேள்!

சென்னையில் ஒரு மாணவி, கொடூரன் ஒருவனால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார்.

அந்த நபரை 24 மணி நேரத்துக்குள் பிடித்து கைது செய்து சிறையில் அடைத்து விட்டது சென்னை காவல்துறை. அனைவர் பாதுகாப்பையும் உறுதி செய்துள்ளது அரசு.

எங்கே இழவு விழும்/ வன்கொடுமை நடக்காதா என்று காத்திருக்கும் பொள்ளாச்சி பழனிசாமி கூட்டம் ஒரு பக்கம் என்றால், காலம் காலமாக கதறிக் கொண்டிருக்கும் குலத்தொழில் கும்பல் மறுபுறம்.

நம் பிள்ளைகளின் முன்னேற்றத்தைப் பார்த்து கதறிக் கொண்டிருக்கும் 'மனுவாத விகடன் கூட்டம்' எப்படி கார்ட்டூன் போடுகிறது?

பேரறிஞர் பெருந்தகை அண்ணாவுக்குப் பின்னால் ஒரு மாணவி கதறுகிறாராம்!




**அனுராதா ரமணன் பேட்டி கொடுத்தால் எப்படி கார்ட்டூன் போடுவாய்?**

**...வாள் பின்னால் அவர் பதுங்கி இருப்பது மாதிரியா போடுவாய்?**

**காஞ்சிபுரம் கோவில் கருவறைக்குள் நடந்த தேவநாதன் மேட்டர் கட்டுரை போட்டால் யாருக்குப் பின்னால் அந்தப் பெண் மறைந்திருப்பதாய் கார்ட்டூன் போடுவாய்?**

**அண்ணா பல்கலைக் கழகத்துக்கு வேந்தர் யார்? எல்லா துணைவேந்தர்களையும் கண்ட்ரோல் செய்வது யார்? மாஜி ஐ.பி.எஸ். பின்னால் மறைந்திருப்பது போல கார்ட்டூன் போடுவாயா? பேடி!**

**'பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஆதரவு' என்ற போர்வையில், அண்ணா மீது ஆரிய அகம்பாவத்தையும் கொழுப்பையும் காட்டுவதா?**

பாதிக்கப்பட்டவர் பேர் மட்டுமல்ல, இருப்பிடம் கூட காட்டக்கூடாது என்றால் அதை மீறி அண்ணா பல்கலைக் கழகத்தைக் கொச்சைப்படுத்தத் தயங்காத இந்த வர்ணக்கும்பலின் வன்மத்தை நினைத்தால் வாந்திதான் வருகிறது.

ஆதிக்க சக்திகளின் கையில் ஊடகம் போய்விட்டால், ஊடக சுதந்திரம் கொடுத்து விடக் கூடாது என்பார்கள்.

**ஆனந்த விகடனே... மன்னிப்புக் கேள்!**

**நீ மன்னிப்புக் கேட்டாலும் மன்னிக்க மாட்டோம்!**